
மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது
இராசிபுரம் நகராட்சி

ந.க.எண் : 2987/2024/மப்1, நாள் 02.01.2025
இந்நகரமன்றத்தீர்மான எண் : 671, நாள் 31.12.2024-ன்படி
உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகரஊரமைப்பு
அலுவலகம் அவர்களின் உத்தரவுள் கண்டுள்ள நிபந்தனைகளுடன்
திருமதி மனைப்பிரிவிற்கு அதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

02/1/2025
ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி



மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல்

நாமக்கல் மாவட்டம்

இராசிபுரம் நகராட்சி

நாமக்கல் மாவட்டம் , இராசிபுரம் வட்டம் , இராசிபுரம் நகராட்சி , இராசிபுரம் நகரம் ,வார்டு : A, பிளாக்: 2, டி.எஸ்.எண்:6 /4B -களில் அமையும் மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்ட பகுதி) .

அளவு : 1 : 400

இணையதள விண்ணப்ப எண் : AY607LER

குறிப்பு :

வ

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு	: 1.06 ஏக்கர் (அ) 4310.00 ச.மீ
சாலையின் மொத்த பரப்பு	: 866.25 ச.மீ
ஒதுக்கப்பட்ட மனைகள்	: 18 மனைகள்
மனைப்பிரிவு எல்லை	
நிலையில் உள்ள சாலை	
உத்தேச சாலை	

பொது ஒதுக்கீடு :

உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானபத்திரம் முலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

சாலையின் மொத்தபரப்பு (மூலை முடக்கு உட்பட) : 866.25 ச.மீ

அரசாணை எண் 16-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020-ன் படி 10 சதவீதம் OSR பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையினை அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் (TNCDBR-47(8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1 சதவீதம் ஒதுக்கீடு) :

I. மின் பகிர்மானம் (A)	: 27.87 ச.மீ
II . பொது உபயோகம் (B)	: 23.24 ச.மீ

மூலை முடக்கு : 12.0மீ அகல சாலை வரை 1.50மீ x1.50மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தக்துறையாலும் நிலஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத்துறைக்காகவும் நிலஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண் 181 - ன், வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 19.12.2020 - ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதின்பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டால், மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விருப்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலத்தின் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையில் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் செல்லுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்படவேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line And Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்க வேண்டும்.
13. அரசாணை எண்: 18,16 நகரி (ம) கூ.வ. துறை நாள்: 04.02.2019(ம) 31.01.2020 - ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.

Signature valid

Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2024.10.29 13:47:21

WP/DTCP/NAMAKKAL/LAYOUT APPROVAL No : 271 / 2024

திருமதி.தெ.புவனேஸ்வரி
அளவர்/உதவி வரைவாளர்

திருமதி.செ.சந்தியா
வரைவாளர் நிலை-III

திருமதி.பெ[illegible]வி
மேற்பார்வையாளர்

(E - Sign)
உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.